நீலகிரி மாவட்டத்தில்

# விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்: கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு தலைமையில் நடைபெற்றது



ஊட்டி, நவ.23-

நீலகிரி மாவட்ட கலெக்டர் கூடுதல் அலுவலகத்தில், விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு தலைமையில் நேற்று (22.11.2024) நடைபெற்றது.

விவசாய சங்கங்களிடமிருந்து முன்னதாகவே பெறப்பட்ட 36 கோரிக்கை மனுக்கள் சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு, இன்று நடைபெற்ற விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில்; அந்த மனுக்களின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பதில்களாக விவசாயிகளுக்கு தெரிவிக்கப்பட்டது. இக்கூட்டத்தில் மாவட்ட கலெக்டர் தெரிவித்ததாவது

நீலகிரி மாவட்டத்தில், இயற்கை வேளாண்மை திட்டம் குறித்து வட்டார அளவிலும் கிராம அளவிலும் கூட்டங்கள் நடத்த வேண்டுமெனவும் இத்திட்டத்தின் முன்னேற்றம் மற்றும் செயலாக்கம் குறித்து வேளாண் அறிவியல் மையம் மூலம் ஆய்வு மேற்கொள்ள வேண்டும் எனவும், கூடலூர் பகுதி விவசாயிகளுக்கு நெல் அறுவடை செய்யும் இயந்திரம் கொள்முதல் செய்வது தொடர்பாக வேளாண் பொறியியல் துறையினர் கருத்துரு சமர்ப்பிக்க வேண்டும் எனவும், மாதத்தின் முதல் வெள்ளிக்கிழமையில் துணை பதிவாளர் (பால் வளம்) தலைமையில் பால் சங்கங்களுக்கான குறைதீர்க்கும் நாள் கூட்டம் ஆவின் அலுவலக வளாகத்தில் நடத்தபட வேண்டும் எனவும் விவசாயம் தொடர்பான கோரிக்கைகள்; விரைந்து நடவடிக்கை எடுக்கப்படும் என மாவட்ட கலெக்டர் தெரிவித்தார். இக்கூட்டத்தில், மாவட்ட வன அலுவலர் (கூடலூர்) வெங்கடேஷ் பிரபு, தோட்டக்கலைத் துறை இணை இயக்குநர் ஷிபிலா மேரி, துணை இயக்குநர் ஆம்ரோஸ் பேகம், ஆவின் பொது மேலாளர் ஜெயராமன், விவசாயிகள் உட்பட அரசுத்துறை அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

ஈரோடு மாவட்டத்தில்

# வளர்ச்சித் திட்டப்பணிகள் தொடர்பான ஆய்வு கூட்டம்: அமைச்சர் சு.முத்துசாமி தலைமையில் நடைபெற்றது

ஈரோடு,நவ.23-

ஈரோடு மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் சு.முத்துசாமி தலைமையில் வளர்ச்சித் திட்டப்பணிகள் தொடர்பான ஆய்வு கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் ஈரோடு மாநகராட்சி, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை, வருவாய் பேரிடர் மேலாண்மைத்துறை, இந்து சமய அறநிலையத்துறை, பொதுப்பணித்துறை (நீர்வள ஆதாரம்), மருத்துவம் - மக்கள் நல்வாழ்வுத்துறை உள்ளிட்ட அனைத்துத் துறைகளின் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டப்பணிகள் தொடர்பாக துறை முதன்மை அலுவலர்களுடன் விரிவாக ஆய்வு மேற்கொண்டார்.

, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது,

தமிழ்நாடு முதலமைச்சர் அத்திக்கடவு அவிநாசி திட்டத்தினை கடந்த 17.08.2024 அன்று துவக்கி வைத்தார்கள். இன்றைய தினம் (22.11.2024) காலிங்கராயன் அணைக்கட்டிலிருந்து வினாடிக்கு 336 கன அடி நீர் உபரியாக வெளியேறுகிறது. பவானிசாகர் அணைக்கும் காலிங்கராயன்



அணைக்கட்டிற்கும் இடைப்பட்ட பவானி ஆற்றின் நீர்பிடிப்பு பகுதிகளில் பெய்த மழையின் காரணமாக பவானி ஆற்றில் நீர்வரத்து அதிகரித்து காலிங்கராயன் அணைக்கட்டிலிருந்து உபரி நீர் வெளியேறுகிறது. இத்திட்டத்தின் அதிகபட்ச நீரேற்றும் திறன் வினாடிக்கு 250 கன அடியாக உள்ளது. இத்திட்டத்தில் இணைக்கப்பட்டுள்ள குளம், குட்டைகளுக்கு ஒரு வருடகாலத்தில் வழங்க திட்டமிடப்பட்டுள்ள 1500 மில்லியன் கன அடி நீரில் 17.08.2024 முதல் இன்று காலை வரை 644.00 மில்லியன் கன அடி நீர் குளம் குட்டைகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

மொத்தம் உள்ள 1045 குளம், குட்டைகளில் தற்பொழுது 974 குளம், குட்டைகளுக்கு நீர் செல்வது உறுதி செய்யப்பட்டுள்ளது. இதில் 101 குளங்கள் முழுமையாக நிரம்பியுள்ளது. மீதமுள்ள 71 குளம், குட்டைகளுக்கும் விரைவில் நீர் வழங்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. உபரி நீர் ஏறத்தாழ 250 கன அடிக்கு மேல் வருகிறபொழுது தண்ணீர் எடுக்கப்பட்டு வருகிறது. அந்த வகையில் 54 நாட்கள் இதுவரையில் எடுக்கப்பட்டுள்ளது. எனவே வருகின்ற உபரி நீர் அனைத்தையும் எடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் கலெக்டர் ராஜ கோபால் சுன்கரா மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார், கோபி செட்டிபாளையம் சார் ஆட்சியர் சிவானந்தம் அத்திகடவு - அவினாசி திட்ட செயற்பொறியாளர் சுப்பிரமணியன், மாநகர பொறியாளர் விஜயகுமார் உட்பட அனைத்துத்துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# ஜனாதிபதி திரவுபதி முர்மு ஊட்டி வருகை: சாலைகளில் பேட்ஜ் போடும் பணிகள் தீவிரம்

ஊட்டி, நவ.23-

ஜனாதிபதி திரவுபதி முர்மு ஊட்டி வருவதையொட்டி சாலைகளில் பேட்ஜ் போடும் பணிகள் தீவிரமாக நடந்து வருகிறது.



திருவாரூர் மத்திய பல்கலைக்கழக பட்டமளிப்பு விழா மற்றும் குன்னூர் வெலிங்டன் ராணுவ கல்லூரியில் அதிகாரிகளுடன் கலந்துரையாடல் ஆகிய நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக இந்திய ஜனாதிபதி திரவுபதி முர்மு வரும்

27-ந் தேதி டெல்லியில் இருந்து விமானம் மூலம் கோவை, சூலூர் விமானப் படை விமான தளத்திற்கு வந்து அங்கிருந்து ஹெலிகாப்டர் மூலம் ஊட்டி வருகிறார்.

ஊட்டியில் உள்ள ராஜ்பவனில் தங்கும் அவர் 28-ந் தேதி சாலை மார்க்கமாக குன்னூர் ராணுவ அதிகாரிகள் பயிற்சி பெறும் கல்லூரிக்குச் சென்று அங்கு நடைபெறும் நிகழ்ச்சியில் கலந்து கொள்கிறார். பின்னர் மீண்டும் ராஜ்பவன் வந்து தங்குகிறார். 29-ந் தேதி ஊட்டி ராஜ்பவனில் பழங்குடியின மக்களை சந்திக்கிறார்.

30-ந் தேதி காலை ஹெலிகாப்டர் மூலம் கோவை சூலூர் விமானப்படை தளத்திற்கு செல்லும் விமானம் மூலம் திருச்சி சென்று அங்கிருந்து திருவாரூர் செல்கிறார். திருவாரூரில் பல்கலைக்கழக நிகழ்ச்சிகளில் பங்கேற்ற பின்பு மீண்டும் திருச்சி வந்தடைந்து திருச்சியில் இருந்து விமானம் மூலம் டெல்லி திரும்புகிறார்.இந்நிலையில் குடியரசு தலைவர் திரவுபதி முர்மு வருகையை முன்னிட்டு மேற்கொள்ள வேண்டிய பாதுகாப்பு ஏற்பாடு குறித்து மாவட்ட நிர்வாகம் போலீசார் ஆலோசனை மேற்கொண்ட நிலையில், தீட்டுக்கல் ஹெலிகாப்டர் தளத்தை சீரமைக்கும் பணிகள் நேற்று காலை முதல் நடைபெற்று வருகிறது. அங்கு 24 மணி நேரமும் துப்பாக்கி ஏந்திய போலீசார் சுழற்சி முறையில் பாதுகாப்பு பணியில் ஈடுபட உள்ளனர். மேலும் ஹெலிகாப்டர் தளத்தில் வெடிகுண்டு நிபுணர்களும் தீவிர சோதனையில் ஈடுபட்டனர். இதேபோல் தீட்டுக்கல் ஹெலிகாப்டர் தளம் அமைந்துள்ள பகுதியில் பகுதியில் வெளி ஆட்கள் நுழைய போலீசார் தடை விதித்துள்ளனர். இதேபோல் சோதனை சாவடிகளில் கண்காணிப்பு பணிகள் தீவிர படுத்தப்பட்டுள்ளது. சிறப்பு பிரிவு போலீசார் கூடுதல் ரோந்து பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

மேலும் ஜனாதிபதி வந்திறங்கும் தீட்டுக்கல் ஹெலிகாப்டர் தளம் முதல் ராஜ்பவன் வரையிலான மாநில நெடுஞ்சாலையிலும்;, பிங்கர்போஸ்ட் முதல் வெலிங்டன் வரையிலான தேசிய நெடுஞ்சாலையிலும் பேட்ஜ் ஒர்க் போடும் பணிகளும் தீவிரமாக நடைபெற்று வருகிறது

ஈரோடு மாவட்டத்தில்

# மருத்துவம் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பில் ஆண்களுக்கான நவீன குடும்ப நல வார விழா விழிப்புணர்வு வாகனம்

## கலெக்டர் ராஜ கோபால் சுன்கரா துவக்கி வைத்தார்

ஈரோடு,நவ.23-

ஈரோடு மாவட்ட ஆட்சியரக வளாகத்தில் மருத்துவம் - மக்கள் நல்வாழ்வுத்துறை மற்றும் மாவட்ட குடும்ப நல இயக்கம் சார்பில், கலெக்டர் ராஜ கோபால் சுன்கரா ஆண்களுக்கான நவீன குடும்ப நல இரு வார விழா 21.11.2024 முதல் 04.12.2024 வரை நடைபெறுவதை முன்னிட்டு, விழிப்புணர்வு ரதத்தினை கொடியசைத்து துவக்கி வைத்தார்.



ஈரோடு மாவட்டத்தில் மருத்துவம் - மக்கள் நல்வாழ்வுத்துறை மற்றும் மாவட்ட குடும்ப நல இயக்கம் சார்பில், நிரந்தர ஆண்களுக்கான நவீன கருத்தடை சிகிச்சை விளம்பரம் இரு வார விழாவாக நவம்பர் 21 முதல் டிசம்பர் 4 வரை 'குடும்பக் கட்டுப்பாடு பற்றி இணைந்தே பேசுவோம், அதனை இன்றே தொடங்குவோம்' என்ற கருப்பொருளுடன் நடைபெறுகிறது.

இதில் ஆண்களுக்கான நிரந்தர கருத்தடை இலவச சிறப்பு சிகிச்சை முகாம்கள் மாவட்டத்தில் உள்ள அனைத்து வட்டார ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் அரசு மருத்துவமனைகளிலும் நவம்பர் 25 முதல் டிசம்பர் 10-ஆம் தேதி வரை தொடர்ந்து நடைபெற உள்ளது. அதனை முன்னிட்டு, கலெக்டர் விழிப்புணர்வு வாகனத்தை தொடங்கி வைத்து, குடும்ப நல விளக்கக் கையேடு மற்றும் கைப்பிரதிகளை வெளியிட்டார். இந்த விழிப்புணர்வு வாகனம் பொது மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில்; நகர்ப்புறம் மற்றும் கிராமப்புற பகுதிகளில் சென்று விழிப்புணர்வு ஏற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.ஈரோடு மாவட்டத்தில் நடப்பு ஆண்டில் 34 ஆண்களுக்கு குடும்ப நல கருத்தடை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது. மேலும் 5531 பெண்களுக்கு குடும்ப நல அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது. இந்த ஆண்டு ஆண்களுக்கான குடும்ப நல கருத்தடை சிகிச்சை இலக்கான 300 முழுமையாக எய்திட திட்டம் வகுக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.மேலும் இந்த நவீன ஆண் கருத்தடை சிகிச்சை முறையானது, 100 சதவீதம் பாதுகாப்பானது மற்றும் பக்க விளைவுகள் இல்லாதது. மேலும், மருத்துவமனையில் தங்க வேண்டிய அவசியம் இல்லை. கடின உழைப்பிற்கு தடையில்லாதது. கருத்தடை சிகிச்சை மேற்கொள்பவர்களுக்கு ரூ.1,100/- மற்றும் உதவிக்கு வருபவர்களுக்கு ரூ.200/-ம் ஊக்கத் தொகையாக வழங்கப்படுகிறது. அதிக எண்ணிக்கையில் குழந்தை பெற்று அவதிப்படுவதை விட பிறந்ததை காப்பாற்றி இனி பிறப்பதைத் தவிர்த்து அளவான குடும்பம் அமைத்து ஆனந்தமாய் வாழ தந்தையர்கள் இந்த நவீன ஆண் கருத்தடை சிகிச்சை முறையை மேற்கொள்ளலாம் என குடும்பநலத்துறையின் முலம் அறிவுறுத்தப்பட்டுள்ளது. இவ்விழாவில் மாவட்ட சுகாதார அலுவலர் மரு.அருணா, துணை இயக்குநர் (மருத்துவம், ஊரக நலப்பணிகள் மற்றும் குடும்ப நலம்) மரு.கவிதா, அரசு தலைமை மருத்துவமனை உறைவிட மருத்துவர் மரு.சசிரேகா, மருத்துவமனைக் கண்காணிப்பாளர் மரு.வெங்கடேஷ், மற்றும் மாவட்ட குடும்பநல செயலக மக்கள் கல்வி தகவல் தொடர்பு அலுவலர் சங்கர சுப்பு உட்பட குடும்ப நலப் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

# ஈரோடு மாநகராட்சி பகுதியில் சுகாதாரத்துறையினர் தீவிர கண்காணிப்பு

ஈரோடு, நவ. 23

தமிழ்நாட்டில் தற்போது வடகிழக்கு பருவமழை பரவலாக செய்து வருகிறது. ஈரோடு மாவட்டத்திலும் கடந்த சில நாட்களாக தொடர்ந்து மழை பெய்து வருவதால் கொசுக்கள் மூலம் பரவும் டெங்கு, டைபாய்டு, மலேரியா மற்றும் வைரஸ் காய்ச்சல், சளி பாதிப்பு அதிகரிக்க தொடங்கியுள்ளது.

இதன் காரணமாக மாவட்டத்தில் உள்ள அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் நாள்தோறும் சளி, காய்ச்சல் பாதிப்புடன் ஏராளமானோர் சிகிச்சை பெற வருகின்றனர். குறிப்பாக மாவட்டத்திலுள்ள அரசு மருத்துவமனையில் காய்ச்சல் பிரிவில் நோயாளிகள் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்த வண்ணம் உள்ளது. இதில் டெங்கு போன்ற வைரஸ் காய்ச்சல் அறிகுறி கண்டறியப்பட்டு அவர்களுக்கு அரசு மருத்துவமனைகளில் காய்ச்சல் வார்டுகளில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இது குறித்து மாநகராட்சி நகர் நல அலுவலர் டாக்டர் கார்த்திகேயன் கூறியதாவது:-ஈரோடு மாநகராட்சியில் 11 நகர்புற சுகாதார நிலையம், 17 நகர்புற நலவாழ்வு மையம் செயல்பட்டு வருகிறது. தற்போது வடகிழக்கு பருவமழையால் மாநகராட்சி பகுதியில் நான்கு மண்டல பகுதிகளிலும் வசிக்கும் மக்களுக்கு காய்ச்சல் மற்றும் சளி பாதிப்பு அதிகரித்துள்ளது. இருப்பினும் போதுமான மருந்துகள் இருக்கு வைக்கப்பட்டுள்ளது. இதில் கடந்த 20 நாட்களில் மட்டும் நான்கு பேருக்கு டெங்கு பாதிப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது. தீவிர கண்காணிப்பில் வைக்கப்பட்டு சிறப்பு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. வசிக்கும் பகுதியில் மக்களுக்கு காய்ச்சல் மற்றும் சளி பாதிப்பு உள்ளதா என கண்டறியும் வகையில் சிறப்பு மருத்துவ முகாம் நடத்தப்பட்டுள்ளது. நோய் பாதிப்பு கண்டறியப்பட்டவர்கள் வசிக்கும் பகுதியில் கொசு மருந்து ஒழிப்பு மற்றும் காய்ச்சல் கண்டறியும் முகாமும் நடத்தப்பட்டு வருகிறது. இருப்பினும் கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு டெங்கு பாதிப்பு குறைவு தான். டெங்கு கொசுக்களை ஒழிக்கும் பனி மாநகராட்சியில் உள்ள 60 வார்டுகளிலும் தீவிர படுத்தப்பட்டுள்ளது. மக்கள் முடிந்த அளவு வீடுகளில் தண்ணீர் தேங்கி இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். மழைக்காலம் என்பதால் தண்ணீரை காய்ச்சி குடிக்க வேண்டும். காய்ச்சல் இரும்பல், சளி இருந்தால் சுயமாக மருந்து எடுத்துக் கொள்ளாமல் அருகில் இருக்கும் மருத்துவர்களை கலந்து ஆலோசித்து மருத்துவர்கள் கூறும் மருந்துகளை எடுத்துக் கொள்ள வேண்டும்.இவ்வாறு அவர் கூறினார்.

# ரூ.5 லட்சத்துடன் தந்தை பெரியார் விருது பெற சமூக நீதிக்காக பாடுபடுபட்டவர்கள் விண்ணப்பிக்கலாம்

## கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு தகவல்

ஊட்டி, நவ.23-

ரூ.5 லட்சத்துடன் தந்தை பெரியார் விருது பெற சமூக நீதிக்காக பாடுபடுபட்டவர்கள் விண்ணப்பிக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக நீலகிரி மாவட்ட கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளதாவது-

சமூக நீதிக்காக பாடுபடுபவர்களை சிறப்பு செய்வதற்காக 'சமூக நீதிக்கான தந்தை பெரியார் விருது' 1995 ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகிறது.சமூக நீதிக்கான தந்தை பெரியார் விருது பெறுவோருக்கு ரூ.5,00,000/- (ரூபாய் ஐந்து லட்சம் மட்டும்) விருது தொகையும், ஒரு சவரன் தங்கப்பதக்கமும், தகுதியுரையும் வழங்கப்படுகிறது. இவ்விருதாளர் முதலமைச்சரால் தேர்வு செய்யப்படுகிறார்.2024 - ஆம் ஆண்டிற்கான தமிழக அரசின் 'சமூக நீதிக்கான தந்தை பெரியார் விருது' வழங்குவதற்கு உரிய விருதாளரை தேர்ந்தெடுக்க பரிந்துரைகள் வரவேற்கப்படுகிறது. எனவே, நீலகிரி மாவட்டத்தில் சமூக நீதிக்காக பாடுபட்டு பொது மக்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்திட மேற்கொள்ளப்பட்ட பணிகள் மற்றும் அதன் பொருட்டு எய்திய சாதனைகள் ஆகிய தகுதிகள் உடையவர்கள் தங்களது விண்ணப்பத்தினை நீலகிரி மாவட்ட கலெக்டருக்கு அனுப்பி வைக்கலாம்.தங்களது விண்ணப்பம், தங்களின் சுயவிவரம், முழு முகவரி, தொலைபேசி எண் மற்றும் சமூக நீதிக்காக பாடுபட்ட பணிகள் குறித்த விவரம் மற்றும் ஆவணங்கள் உள்ளடக்கியதாக இருத்தல் வேண்டும். 2024-ஆம் ஆண்டிற்கான சமூக நீதிக்கான தந்தை பெரியார் விருதிற்கான விண்ணப்பங்களை உதகமண்டலம், பிங்கர்போஸ்டில் உள்ள மாவட்ட கலெக்டர் கூடுதல் வளாகத்தில் அமைந்துள்ள மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகத்தில் படிவத்தை பெற்று, பூர்த்தி செய்து சமர்ப்பிக்க வேண்டிய கடைசி நாள் 20.12.2024 ஆகும். இவ்வாறு கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு தெரிவித்துள்ளார்.

தாளவாடி அருகே

# தோட்டத்தில் புகுந்து 60 தென்னை மரங்களை சேதப்படுத்திய யானை கூட்டம்: தடுப்பு சுவரையும் உடைத்து அட்டகாசம்

தாளவாடி.நவ.23-

ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம் புலிகள் காப்பகத்தில் மொத்தம் 10 வனச்சரகங்கள் உள்ளன.

இந்த வனச்சரகத்தில் ஏராளமான வனவிலங்குகள் வசித்து வருகின்றன. உணவு தண்ணீர் தேடி யானைகள் அடிக்கடி விவசாய தோட்டத்தில் புகுந்து பயிர்களை நாசம் செய்வது தொடர்கதையாகிவருகிறது.

இந்நிலையில் ஜீர்கள்ளி வனச்சரகத்திற்கு உட்பட்ட அருள்வாடி பகுதியில் உள்ள விவசாயிகள் கரும்பு, வாழை தென்னை, மஞ்சள் பயிர் செய்துள்ளனர்.

இந்நிலையில் நேற்று வனப்பகுதியில் இருந்து வெளியேறிய காட்டு யானைகள் விவசாயி மாதேவப்பா ( 58) என்பவர் தோட்டத்தில் புகுந்து தென்னை மரத்தை சேதாரம் செய்துள்ளது. காலையில் தோட்டத்துக்கு சென்று பார்த்த போது தென்னை மரம் சேதாரம் ஆனதை கண்டு அதிர்ச்சி அடைந்தார். சுமார் 60 தென்னை மரத்தை யானைகள் சேதாரம் செய்திருந்தது. யானைகள் இரவு நேரத்தில் கூட்டமாக வந்து தென்னை மரத்தை சேதபடுத்தியது தெரிய வந்தது.

மேலும் தோட்டத்தை சுற்றி வைக்கப்பட்டிருந்த தடுப்பு சுவரையும் உடைத்து யானை சேதப்படுத்தி உள்ளது. இது குறித்து அப்பகுதியினர் கூறும் போது,

கடந்த சில நாட்களாக இரவு நேரங்களில் யானை கூட்டம் வனப்பகுதியை விட்டு வெளியேறி கிராமத்துக்குள் புகுந்து விலை நிலங்களை சேதப்படுத்தி வருகிறது. நேற்று கூட விவசாயி அம்மாதேவப்பா என்பவரின் தோட்டத்திற்குள் புகுந்த காட்டு யானைகள் 60 தென்னை மரங்களை சேதப்படுத்தி உள்ளது.

ஏற்கனவே கூறியது போன்று ஊருக்கு வெளியே பெரிய அகழி அமைக்க வேண்டும். இரவு நேரத்தில் வனத்துறையினர் ரோந்து பணியை தீவிரப்படுத்த வேண்டும். பாதிக்கப்பட்ட விவசாயிக்கு வனத்துறையினர் உரிய நிவாரணம் வழங்க வேண்டும் என்றனர்.

தின பூமி நாளிதழ் படியுங்கள்



ஈரோடு சென்னிமலை ரோட்டில் தனியார் கல்லூரி அருகே பிடிபட்ட 9 ஆடி நீளம் உள்ள மஞ்சள் சாரைப் பாம்பை பாம்பு பிடி வீரர் யுவராஜ் பிடித்தார்.

# தேசிய தொல்குடியினர் தினத்தை முன்னிட்டு பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு பரிசு

## அமைச்சர் மா.மதிவேந்தன் வழங்கினார்



**நாமக்கல்,நவ.23-**

நாமக்கல் மாவட்டம், நாமகிரிப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், முள்ளுக்குறிச்சி அரசு பழங்குடியினர் பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் (22.11.2024) ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், தேசிய தொல்குடியினர் தினம் 2024-ஐ முன்னிட்டு நடத்தப்பட்ட பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற 164 பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு பரிசுகளையும், 43 பயனாளிகளுக்கு அரசு நல திட்ட உதவிகளையும் வழங்கினார்.

ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் தெரிவித்ததாவது,

தமிழ்நாடு முதலமைச்சர் பழங்குடியின மக்களின் மேம்பாட்டிற்காக பல்வேறு அரசு நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகின்றார்கள். குறிப்பாக, பழங்குடியின மக்களின் கல்வி, சுகாதாரம் உள்ளிட்ட அடிப்படை வசதிகளை மேம்படுத்திட தனி கவனம் செலுத்தி வருகிறார். ஒவ்வொரு ஆண்டும் சுமார் ரூ.300 கோடி நிதி ஒதுக்கீடு செய்து பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்.

நாடு முழுவதும், நவம்பர் திங்கள் 15 ஆம் நாள் தேசிய தொல்குடியினர் நாளாக கொண்டாடப்படுகிறது. தமிழ்நாடு அரசின் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில், தேசிய தொல்குடியினர் தினத்தை கொண்டாடும் பொருட்டு பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்தப்பட்டுவருகிறது. பழங்குடியின மக்களின் வாழ்வியலை அடுத்த தலைமுறைக்கு எடுத்து செல்லவும் பள்ளி மாணவர்களுக்கான பேச்சுப்போட்டி, ஓவியப் போட்டி, கட்டுரை போட்டி, வினாடி – வினா, மாறுவேட போட்டி, பாட்டு போட்டி, நாடகம் மற்றும் ஓட்டப்பந்தயம், குண்டு எரிதல், நீளம் தாண்டுதல், கைவினைப் பொருட்கள் செய்தல் உள்ளிட்ட பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டன. இப்போட்டிகளில் 10 பழங்குடியின அரசு பள்ளிகளில் இருந்து கலந்து கொண்ட 1629 மாணவ மாணவியர்களில் 589 மாணவ, மாணவியர்களுக்கு பரிசுகள் வழங்கபட உள்ளது. குறிப்பாக, இராசிபுரம் சட்டமன்ற தொகுதி முள்ளுக்குறிச்சியில் நடைபெற்ற பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற 82 மாணவர்கள் மற்றும் 82 மாணவியர்களுக்கு கேடயம் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்படுகிறது.

தேசிய தொல்குடியினர் தினத்தை முன்னிட்டு, நாமக்கல் மாவட்டத்தில் ஆதார் அட்டை உள்ளிட்ட அத்தியாவசிய ஆவணங்கள் வழங்கும் முகாம் மற்றும் மருத்துவ முகாம்கள் கடந்த 16.11.2024 முதல் தொடங்கப்பட்டு 22.11.2024 வரை சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டது. இம்முகாம்களில், 18 துறைகளைச் சேர்ந்த 25-க்கும் மேற்பட்ட சேவைகள் வழங்கப்பட்டது. இதுவரை, நடைபெற்ற தேசிய தொல்குடியினர் தின சிறப்பு முகாம்களில் சுமார் 750 மனுக்கள் பெறப்பட்டு 100-க்கும் மேற்பட்ட மனுக்கள் மீது உடனடி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இன்றைய தினம் பெறப்பட்ட மனுக்கள் மீது உடனடியாக தீர்வு காணப்பட்டு, 9 நபர்களுக்கு பயிர் கடன், 9 நபர்களுக்கு மருத்துவ காப்பீடு அட்டைகள், 22 நபர்களுக்கு பழங்குடியினர் நல வாரிய அடையாள அட்டைகள், 2 பட்டா மாறுதலுக்கான ஆணை நபர்களுக்கும், 1 மாற்றுத்திறனாளிக்கு 40 ஆயிரம் ரூபாய்க்கு கடனுதவிக்கான காசோலை என மொத்தம் 43 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் இன்றைய தினம் வழங்கப்படுகிறது. மீதமுள்ள மனுக்கள் நடவடிக்கை எடுக்கப்படும். பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன் என ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் தெரிவித்தார். இந்நிகழ்ச்சியில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கே.பி.இராமசாமி, முதன்மை கல்வி அலுவலர் ப.மகேஸ்வரி, பழங்குடியின நல திட்ட அலுவலர் திரு பீட்டர் ஞானராஜ், தனித்துணை கலெக்டர் (சமூக பாதுகாப்பு திட்டம்), ச.பிரபாகரன், உதவி இயக்குநர் (வேளாண்மை துறை) உமா மகேஸ்வரி, இராசிபுரம் வட்டாட்சியர் சரவணன் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# அ.தி.மு.க.வில் வாரிசு அரசியல் இல்லை: அடுத்த தலைமுறை வரும்போது தலைவர்கள் தானாக வருவார்கள்

## முன்னாள் அமைச்சர் கே.பி. முனுசாமி பேட்டி



**தர்மபுரி,நவ.23-**

அ.தி.மு.க.வில் வாரிசு அரசியல் இல்லை, அடுத்த தலைமுறை வரும்போது தலைவர்கள் தானாக வருவார்கள் என்று தர்மபுரியில் முன்னாள் அமைச்சர் கே.பி. முனுசாமி கூறினார்.

தர்மபுரி மாவட்ட அதிமுக கள ஆய்வுக் கூட்டம் தர்மபுரியில் உள்ள கட்சி அலுவலகத்தில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட கட்சியின் துணைப் பொதுச் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான கே.பி. முனுசாமி எம்.எல்.ஏ. கலந்து கொண்டு பேசினார். தொடர்ந்து அவர் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார்.

அப்போது அவர் கூறியதாவது :- வருகிற 2026 சட்டமன்ற பொது தேர்தலில் வெற்றி பெற்று எடப்பாடி பழனிசாமியை, முதல்-அமைச்சர் ஆக்குவதற்கு மாவட்டம் தோறும் கட்சி நிர்வாகிகள் தீவிரமாக களப்பணியாற்றுகின்றனர். இந்த நிர்வாகிகளின் பணிகள் குறித்து கள ஆய்வு நடத்தி வருகிறோம். மாநில முழுவதும் தலைமை கழக நிர்வாகிகள் இந்த கள ஆய்வு பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

தனிப்பட்ட கொலைகளை சட்ட ஒழுங்காக கருதக்கூடாது என வயது முதிர்வின் காரணமாக ஆர்.எஸ். பாரதி பேசி இருக்கிறார். பொது இடத்தில், ஒருவன் வெட்டுகிறான் என்றால், இந்த நாட்டின் சட்டம் ஒழுங்கின் மீது அவநம்பிக்கை ஏற்பட்டிருக்கும். இங்கே வெட்டினாலும் கேட்பதற்கு ஆளில்லை என்ற மன நிலைக்கு வந்துவிட்டதால் வெட்டுகிறான்.

அந்த மனநிலையில்லாமல் அவன் பயப்படக்கூடிய நிலையில் இருந்திருந்தால் நிச்சயமாக வெட்டி இருக்க மாட்டான். எடப்பாடியார் ஆட்சி காலத்தில் எங்கேயேனும் இதுபோன்ற வன்முறை சம்பவங்கள் நடந்திருக்கிறதா எனறு ஆர்.எஸ்.பாரதிமை கேட்க விரும்புகிறேன். அ.தி.மு.க. ஒரு முதியோர் இல்லம் என்று மருது அழகுராஜ்கூறியிருக்கிறார். அவர் விரக்தியில் எதையெதையோ பேசுகிறார். யாரையோ திருப்தி படுத்துவதற்காக பேசுகிறார். அண்ணாமலை, நடிகர் விஜய், உதயநிதி ஸ்டாலின் எல்லாம் இளைஞர்கள் என்று அவர் கூறியிருக்கிறார். அண்ணாமலை என்பவர் ஒரு தேசிய கட்சியின் தலைவர். அவர் 3 ஆண்டுகள் இருப்பார் அதன் பிறகு போய்விடுவார். நடிகர் விஜய் இப்பொழுதுதான் கட்சியை தொடங்கி இருக்கிறார்.

தி.மு.க.வில் உதயநிதி ஸ்டாலின் தனிப்பட்ட உழைப்பால் இந்த இடத்திற்கு வரவில்லை. தாத்தா, அப்பா, அடுத்தது மகன் என்ற நிலையில் இந்த இடத்திற்கு வந்திருக்கிறார். இது வாரிசு அரசியல். ஆனால் அ.தி.மு.க. ஒரு ஜனநாயக கட்சி. இங்கு வாரிசு அரசியல் இல்லை. முன்னாள் முதல்-அமைச்சர் எம்.ஜி.ஆர். கட்சியை தொடங்கி, மறைந்த போது அடுத்த தலைவரை அடையாளம் காட்டவில்லை. அதேபோலவே முன்னாள் முதல்-அமைச்சர் ஜெயலலிதா உயிரிழந்த பிறகு அடுத்த தலைவரை அடையாளம் காட்டவில்லை. ஆனால் இந்தக் கட்சியில் உழைப்பவர்கள் தானாக தலைவராக வந்திருக்கிறார்கள். அடுத்த தலைமுறை வரும்பொழுது தலைவர்கள் தானாக வருவார்கள். அ.தி.மு.க.வில் உழைப்பவர்கள் தானாக உயர்ந்த இடத்திற்கு வர முடியும் என்பதற்கு நாங்களே சான்று.

இவ்வாறு கே.பி.முனுசாமி கூறினார். அப்போது முன்னாள் அமைச்சர்கள் கே.பி.அன்பழகன், பா.வளர்மதி, மாபா பாண்டியராஜன், கட்சியின் அமைப்பு செயலாளர் கே.சிங்காரம், எம்.எல்.ஏக்கள் கோவிந்தசாமி, சம்பத்குமார் மற்றும் நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

# தர்மபுரி நகர திமுக செயற்குழு ஆலோசனைக் கூட்டம்



**தர்மபுரி,நவ.23-**

தர்மபுரி நகர தி.மு.க. செயற்குழு ஆலோசனைக் கூட்டம் தர்மபுரியில் உள்ள கட்சி அலுவலகத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு நகர அவைத் தலைவர் அழகுவேல் தலைமை தாங்கினார். நகர செயலாளர் நாட்டான் மாது வரவேற்று பேசினார். நகர பொருளாளர் சம்பந்தம், நகரத் துணைச் செயலாளர்கள் அன்பழகன், கோமளவல்லி ரவி, மாவட்ட பிரதிநிதிகள் சுருளிராஜன், கனகராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் மாவட்ட செயலாளர் தடங்கம் சுப்பிரமணி கலந்து கொண்டு தீர்மானங்கள் குறித்து விளக்கி பேசினார். வருகிற 27-ம் தேதி துணை முதல்-அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழாவை சிறப்பாக கொண்டாடுவது, வருகிற 6-ம் தேதி தர்மபுரி மாவட்டம் வருகை தரும் துணை முதல்-அமைச்சர் உதயநிதி ஸ்டாலினுக்கு சிறப்பான வரவேற்பு அளிப்பது, வருகிற சட்டமன்ற தேர்தலில் நகர திமுக நிர்வாகிகள் தீவிர களப்பணியாற்றுவது, இளைஞர் அணி மற்றும் மகளிர் அணிக்கு புதிய உறுப்பினர்கள் சேர்ப்பது, தமிழக அரசின் சாதனைகளை பொது மக்களிடம் எடுத்துக் கூறி ஆதரவு திரட்டுவது என்பது உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன.

கூட்டத்தில் மாவட்ட பொருளாளர் தங்கமணி, வக்கீல் அணி மாவட்ட நிர்வாகி தாஸ், முன்னாள் நகர செயலாளர் அன்பழகன், சார்பு அணி மாவட்ட நிர்வாகிகள் குமார், ராஜா, ரஹீம், ரவி மற்றும் நகராட்சி கவுன்சிலர்கள், வார்டு செயலாளர்கள் கலந்து கொண்டனர். முடிவில் நகர துணை செயலாளர் முல்லைவேந்தன் நன்றி கூறினார்.

# கே.ஆர்.பி அணையில் காமராஜரின் வெண்கல சிலை அமைக்க அனுமதி வழங்க கோரி கலெக்டரிடம் மனு

**கிருஷ்ணகிரி,நவ.23-**

கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டணம் ஒன்றியத்திற்குட்பட்ட, மிட்டஹள்ளி கிராமத்தை சேர்ந்த எல் சுப்பிரமணியன் தற்போது இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின், மாநில பொதுக்குழு உறுப்பினராக காங்கிரஸ் கட்சியின், முன்னாள் கிருஷ்ணகிரி மாவட்டத் தலைவராகவும், முன்னாள் மிட்டஹள்ளி ஊராட்சிமன்றத் தலைவராகவும் இருந்து வருகிறார் மாவட்ட காங்கிரஸ் கமிட்டியின் சார்பில் 2017-ஆம் ஆண்டு முதல், பெருந்தலைவர் கர்மவீரர் கல்விக்கு கண்கொடுத்த, காமராஜர் அவர்களின் திருவுருவ முழு வெண்கல சிலையை கே.ஆர்.பி. அணையில் வைப்பதற்கு பல்வேறு முயற்சிகள் எடுத்தும், இதுநாள் வரையில் அனுமதியின்றி, மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் நிலுவையில் உள்ளது. இதுதொடர்பாக கடந்த 2017-ஆம் ஆண்டு, அப்போதைய கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியரிடம் சிலை அமைப்பதற்கு நாங்கள் அனுமதி கேட்டு, அதுதொடர்பாக பல அரசு துறைகளிடமிருந்து பெறப்பட்ட ஆவணங்களை இத்துடன் இணைத்துள்ளார் பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் திருவுருவ முழு வெண்கல சிலையை, எங்கள் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பில் நாங்கள் அமைத்து அரசிடம் ஒப்படைப்பதற்கு அனுமதி வழங்குமாறு மாவட்ட கலெக்டர் கேட்டுக்கொண்டார் ஏராளமான கட்சி நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

## அசல் சொத்து ஆவணம் காணவில்லை

**1/34,** நாயக்கன்கோம்பை, எடப்புளிநாடு, கொல்லிமலை, நாமக்கல் மாவட்டம்-**637411** என்ற முகவரியில் வசித்து வரும் மாதேஸ்வரன் அவர்களின் மனைவி சுமார் **37** வயதுடைய **M.**கோமதி (ஆதார் எண். **355124332404**) ஆகிய நான் இதன் மூலம் பொதுமக்களுக்கு தெரிவித்துக் கொள்வது யாதெனில், சேந்தமங்கலம் சார்பதிவாளர் அலுவலகத்தில் எனது பெயரில் பதிவு செய்யப்பட்ட மூலபத்திரம் ஆவணம் எண்.**3290/2015,** கடந்த **19.11.2024** தேதி ஜெராக்ஸ் எடுக்க வேண்டி இருசக்கர வாகனத்தில் ஒரு மஞ்சள் பையில் போட்டு பின்னால் உள்ள கொண்டியில் மாட்டிக் கொண்டு செம்மேடு பஸ்டாப் அருகில் உள்ள ஜெராக்ஸ் கடையில் ஜெராக்ஸ் எடுக்க வாகனத்தில் வைத்திருந்த மஞ்சள் பையை பார்த்த போது மஞ்சள் பையுடன் காணவில்லை. அக்கம் பக்கம் விசாரித்தும் வரும் வழியில் தேடி பார்த்தும் கிடைக்கவில்லை. யாரேனும் அதனைக் கண்டுபிடித்தால், எனது கைப்பேசி **9488684620** எண்ணிற்கு அல்லது மேற்கண்ட எனது முகவரிக்கு தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

# உங்களைத் தேடி, உங்கள் ஊரில் திட்ட முகாமின் இரண்டாம் நாளான வாழப்பாடியில் முகாமிட்டு கலெக்டர் இரா.பிருந்தாதேவி கள ஆய்வு



**சேலம்,நவ.23-**

"உங்களைத் தேடி, உங்கள் ஊரில்" திட்ட முகாமில் சேலம் மாவட்டம், வட்டத்திற்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் பொதுமக்களின் அடிப்படை வசதிகள் குறித்து கலெக்டர் டாக்டர் இரா. பிருந்தாதேவி, இரண்டாம் நாளாக (22.11.2024) கள ஆய்வு மேற்கொண்டார். கள ஆய்வுக்குப் பின்னர், கலெக்டர் தெரிவித்ததாவது:

"உங்களைத் தேடி, உங்கள் ஊரில்" திட்ட முகாமானது, சேலம் மாவட்டம், வாழப்பாடி வட்டத்தில் 21.11.2024 மற்றும் 22.11.2024 ஆகிய இரண்டு நாள்கள் நடைபெற்றது. இரண்டாம் நாளான இன்றைய தினம் 22.11.2024 காலை வாழப்பாடி பேரூராட்சிக்குட்பட்ட வி.புதுப்பாளையம் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்தில் ஆய்வு மேற்கொண்டு, தினசரி கொள்முதல் செய்யப்படும் பாலின் அளவு குறித்தும், விவசாயிகளுக்கு முறையாக அதற்கான தொகை செலுத்தப்பட்டு வருவது குறித்தும் ஆய்வு செய்யப்பட்டது. அதேபோன்று, வாழப்பாடி பேரூராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தினசரி மேற்கொள்ளப்பட்டுவரும் தூய்மைப்பணிகள் குறித்து நேரில் ஆய்வு செய்யப்பட்டு, பொதுமக்களின் அடிப்படைத் தேவைகள் மற்றும் கோரிக்கைகள் குறித்து கேட்டறியப்பட்டது. மேலும், பொதுமக்களுக்குத் தேவையான பாதுகாக்கப்பட்ட குடிநீர் முறையாக விநியோகம் செய்யப்படுகிறதா என்பது குறித்தும் ஆய்வு செய்யப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறையின் சார்பில் செயல்பட்டுவரும் வாழப்பாடி உழவர் சந்தையில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, அங்கு வருகை தரும் விவசாயிகள் மற்றும் பொதுமக்களுக்காக மேற்கொள்ளப்பட்டுள்ள அடிப்படைத் தேவைகள் குறித்து ஆய்வு செய்யப்பட்டது. வேளாண்மைத்துறையால் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள விலைகளில் காய்கறிகள் விற்பனை செய்யப்படுகிறதா என்பது குறித்தும், காய்கறிகளின் வரத்து மற்றும் விற்பனை குறித்தும் துறை அலுவலர்கள் மற்றும் விவசாயிகளிடம் கேட்டறியப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, வாழப்பாடி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தின் கீழ், குழந்தைகளுக்கு காலை உணவு தயாரிப்பதற்காக தரமான உணவுப் பொருட்கள் பயன்படுத்தப்படுவதை உறுதி செய்து, சமையலறை சுகாதாரமான முறையில் பராமரிக்கப்படுகின்றதா என்பது குறித்தும், குறித்த நேரத்தில் குழந்தைகளுக்கு உணவுகள் பரிமாறப்படுவது குறித்தும் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

பின்னர், வாழப்பாடி அரசு மருத்துவமனையில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, மருத்துவமனையில் உள்நோயாளிகள் பிரிவு, அவசர சிகிச்சைப்பிரிவு, மருந்து மாத்திரைகளின் இருப்பு குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும், தினசரி வருகை தரும் புறநோயாளிகளின் எண்ணிக்கை மற்றும் மருத்துவர்கள், செவிலியர்களின் எண்ணிக்கை குறித்து கேட்டறிந்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இவ்வாறு கலெக்டர் டாக்டர் இரா. பிருந்தாதேவி, தெரிவித்தார்.

"உங்களைத் தேடி, உங்கள் ஊரில்" திட்டத்தின் கீழ், 21.11.2024 மற்றும் 22.11.2024 ஆகிய இரண்டு நாள்கள் வாழப்பாடி வட்டத்தில் கள ஆய்வுப் பணியை மேற்கொண்டுள்ள அலுவலர்கள் பொது மக்களிடமிருந்து பெறப்பட்ட மனுக்கள் மற்றும் கள ஆய்வு குறித்த அறிக்கையினை இன்றையதினம் வழங்கிட அறிவுறுத்தப்பட்டுள்ளது. பொதுமக்களின் மனுக்களின்மீது தொடர்புடைய அலுவலர்கள் விரைந்து உரிய தீர்வு காண வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு கலெக்டர் டாக்டர்.இரா.பிருந்தாதேவி, தெரிவித்தார்.

இந்த ஆய்வின்போது, சேலம் வருவாய் கோட்டாட்சியர் அ.அபிநயா, வாழப்பாடி வட்டாட்சியர் சுமதி, பேரூராட்சி செயல் அலுவலர் கணேசன் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உடனிருந்தனர்.

# மல்லுப்பட்டி அரசு மேல்நிலைப் பள்ளியில், உணவு பாதுகாப்பு துறை சார்பாக புகையிலை பொருட்கள் குறித்து விழிப்புணர்வு



**தர்மபுரி,நவ.23-**

தர்மபுரி மாவட்ட கலெக்டர் சாந்தி, ஐ.ஏ.எஸ்., அவர்கள் உத்தரவின் பேரில், உணவு பாதுகாப்புத்துறை மாவட்ட நியமன அலுவலர் மருத்துவர் ஏ.பானுசுஜாதா, எம்.பி.,பி.எஸ்., அவர்கள் வழிகாட்டல் படி உணவு பாதுகாப்பு துறை சார்பாக,

மல்லுப்பட்டி, அரசு மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் பள்ளி தலைமை ஆசிரியர் மாதேசன், உதவி தலைமை ஆசிரியர் மாதேஷ் மற்றும் மொரப்பூர் ஒன்றிய உணவு பாதுகாப்பு அலுவலர் திருப்பதி உள்ளிட்டோர் முன்னிலையில்,

காரிமங்கலம் மற்றும் பாலக்கோடு ஒன்றிய உணவு பாதுகாப்பு அலுவலர் நந்தகோபால் அவர்கள் தலைமையில், உணவு பொருள் பாக்கெட்கள், தின்பண்ட பாக்கெட்களில் காண வேண்டிய அம்சங்களான பொருள் பெயர், தயாரிப்பு முகவரி, தயாரிப்பு தேதி, முடிவு தேதி, உணவு பாதுகாப்பு உரிமம் எண், உட்காரணிகள், ஊட்டச்சத்து தகவல்கள், நுகர்வோர் தொடர்பு எண் உள்ளிட்ட தகவல்கள் இருத்தல் அவசியம் என விழிப்புணர்வு செய்தார்.

மேலும் புகையிலை பொருட்களால் ஏற்படும் தீங்குகள் குறித்தும், உபயோகிப்பதால் ஏற்படும் வாய் புற்று நோய், நுரையீரல் புற்று நோய், காசநோய், மாரடைப்பு ,ஆண்மை குறைவு, மூளை செயலிழப்பு, ஆஸ்துமா, இருதய ரத்தக்குழாய் நோய், கால் விரல்களில் ஏற்படும் அழுகிய நிலை நோய்கள் குறித்து எடுத்துரைத்து இதன் காரணமாக தமிழக அரசால் தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்கள் குறித்தும் விரிவாக எடுத்துரைத்தார். மாணவர்கள் அதனை கண்டிப்பாக தவிர்த்தல், தடுத்தல் அவசியம் என்றதுடன் தடை செய்யப்பட்ட ஹான்ஸ், கூல் லீப், குட்கா போன்ற பொருள்கள் கடைகளில் விற்பனை கண்டாலோ, மறைத்து பதுக்கி விற்றாலோ ஆசிரியர்களுக்கு தகவல் அளித்தால், உணவு பாதுகாப்புத் துறை மற்றும் காவல் துறை மூலம் தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என விழிப்புணர்வு செய்தார். புகார் தெரிவிக்க வேண்டிய வாட்ஸ் அப் புகார் எண்.9444042322 தெரிவித்தார். நிகழ்வில் புகையிலைப் பொருட்கள் தடுப்பு சார்ந்து உறுதிமொழி ஏற்றுக் கொள்ளப்பட்டது. சுமார் 400க்கும் மேற்பட்ட பள்ளி மாணவர்கள் பங்கேற்றனர்.தமிழ் ஆசிரியர் தேவந்திரன் நன்றி உரையாற்றினார்.

பின்பு உணவு பாதுகாப்பு அலுவலர்கள் நந்தகோபால், திருப்பதி உள்ளிட்ட குழுவினர் பள்ளி அருகாமை, பேருந்து நிறுத்தம் மற்றும் ராயக்கோட்டை சாலை மளிகை, பெட்டி,டீ கடைகள் மற்றும் வெள்ளிச் சந்தை உள்ளிட்ட பகுதிகளிலும் கடைகளில் புகையிலை பொருட்கள்,காலாவதி பொருட்கள், குளிர்பானங்கள் ஆய்வு செய்தனர். விதிமுறை மீறிய, காலாவதி பொருட்கள் காணப்பட்டு பறிமுதல் செய்யப்பட்ட இரண்டு கடைகளுக்கு நியமன அலுவலர் உத்தரவின் பேரில் தலா ஆயிரம் வீதம் ரூபாய்.2000 உடனடி அபராதம் விதித்தனர்.

---

**வருவாய் உட்கோட்ட நடுவர் மற்றும் வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் கிருஷ்ணகிரி**
**ந.க.எண்.மே.எ.அதிமு.5949/2024/டி**
**நாள்: 24.09.2024**

சிவக்குமார், த/பெ.மாரப்பன்,
கதவு எண்.64/130, கும்மனூர் கிராமம்,
சாலமரத்துப்பட்டி அஞ்சல்,
ஊத்தங்கரை வட்டம்,
கிருஷ்ணகிரி மாவட்டம் 635 304
..........மனுதாரர்

உயர்திரு.வருவாய் கோட்டாட்சியர் அவர்கள்,
வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்,
கிருஷ்ணகிரி.
........ எதிர்மனுதாரர்

**அறிவிப்பு**

மேற்படி மனுதாரராகிய, எனது மகன் S.கிருபாகரன் த/பெ. சிவக்குமார் என்பவர் கடந்த 02.05.2014-ம் தேதியில் கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை வட்டம், சாலமரத்துப்பட்டி அஞ்சல், கும்மனூர் கிராமம், கதவு எண்.64/130-ல் உள்ள எனது வீட்டில் பிறந்தார். மேற்படி எனது மகனின் பிறப்பை பதிவு செய்து பிறப்பு சான்றிதழ் வழங்கிட கோரி மேற்படி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனு தாக்கல் செய்துள்ளேன். மேற்படி மனு மீது யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட 15 தினங்களுக்குள் மேற்படி வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் முன்பு ஆஜராகி தங்களது ஆட்சேபனையை தெரிவித்துக் கொள்ளலாம்.

//உத்தரவுப்படி//

மனுதாரர்
சிவக்குமார், த/பெ.மாரப்பன்,
கதவு எண்.64/130, கும்மனூர் கிராமம்,
சாலமரத்துப்பட்டி அஞ்சல்,
ஊத்தங்கரை வட்டம்,
கிருஷ்ணகிரி மாவட்டம் 635 304
செல்: 9585699689

---

**வருவாய் உட்கோட்ட நடுவர் மற்றும் வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் கிருஷ்ணகிரி**
**ந.க.எண்.மே.எ.அதிமு.6269/2024/டி**
**நாள்: 07.10.2024**

அன்னக்கிளி, க/பெ.துரைசாமி,
நாகர்பாளையம் கிராமம்,
வையப்பமலை அஞ்சல்,
நாமக்கல் வட்டம்,
திருச்செங்கோடு மாவட்டம்.
......மனுதாரர்

உயர்திரு.வருவாய் கோட்டாட்சியர் அவர்கள்,
வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்,
கிருஷ்ணகிரி.
........எதிர்மனுதாரர்

**அறிவிப்பு**

மேற்படி மனுதாரராகிய, எனது தாயார் திருமதி.பொன்னாயள் என்பவர் கடந்த 26.10.1996-ம் தேதியில் கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை வட்டம், மாரம்பட்டி அஞ்சல், வசந்தபுரம்-ஒட்டனேரி கிராமத்தில் இறந்துவிட்டார். மேற்படி அவரது இறப்பை பதிவு செய்து இறப்பு சான்றிதழ் வழங்கிட கோரி மேற்படி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனு தாக்கல் செய்துள்ளேன். மேற்படி மனு மீது யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட 15 தினங்களுக்குள் மேற்படி வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் முன்பு ஆஜராகி தங்களது ஆட்சேபனையை தெரிவித்துக் கொள்ளலாம்.

//உத்தரவுப்படி//

மனுதாரர்
அன்னக்கிளி, க/பெ.துரைசாமி,
நாகர்பாளையம் கிராமம்,
வையப்பமலை அஞ்சல், நாமக்கல்
வட்டம், திருச்செங்கோடு மாவட்டம்.
செல்: 9788257840: 8344803753

---

**வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், கிருஷ்ணகிரி.**
**மே.எ.அ.தி.மு.எண்:5011/2024,**
**நாள்:23.08.2024.**

சேகர், த/பெ. லேட்.தேவராஜ்,
க.எண்:3/57, கீழ்குப்பம் கிராமம்,
பாரூர் அஞ்சல்,
போச்சம்பள்ளி வட்டம்,
கிருஷ்ணகிரி மாவட்டம்.
மனுதாரர்.

//எதிராக//

திரு.வருவாய் வட்டாட்சியர் அவர்கள்,
போச்சம்பள்ளி,
கிருஷ்ணகிரி மாவட்டம்.
எதிர்மனுதாரர்.

**அறிவிப்பு.**

மேற்படி மனுதாரராகிய நான் எனது தகப்பனார் தேவராஜ் த.பெ. லேட்.ஆறுமுகம் என்பவர் கடந்த 07.05.2001-ம் தேதி கீழ்குப்பம் கிராமத்தில் உள்ள எங்கள் வீட்டில் உடல் நிலை சரியில்லாத காரணத்தால் இறந்துவிட்டார். அவரது இறப்பு அப்போது பதிவு செய்யப்படவில்லை. எனவே தற்போது அவரது இறப்பு சான்று தேவைப்படுவதால் எனது தகப்பனாரின் இறப்பை பதிவு செய்து இறப்பு சான்றிதழ் வழங்கிடக் கோரி மேற்படி அலுவலகத்தில் மனு தாக்கல் செய்துள்ளேன். மேற்படி மனு மீது யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் இன்றிலிருந்து 15-தினங்களுக்குள் மேற்படி அலுவலகத்தில் நேரில் ஆஜராகி தங்களது ஆட்சேபணையை தெரிவித்துக் கொள்ளலாம்.

மனுதாரர்.
சேகர், த/பெ. லேட்.தேவராஜ்,
க.எண்:3/57, கீழ்குப்பம் கிராமம்,
பாரூர் அஞ்சல்,

---

**உட்கோட்ட நடுவர் நீதிமன்றம் மற்றும் வருவாய் கோட்டாட்சியர், சங்ககிரி.**
**பிஇசிய எண். 591 / 2024 ( D )**

லட்சுமணன், S/O. கொழந்தகவுண்டர்,
க.எண். 7 / 27, வெட்டினித்தெரு,
பக்கநாடு கிராமம்
எடப்பாடி வட்டம், சேலம் மாவட்டம்.
............ மனுதாரர்

/ எதிராக /

வட்டாட்சியர் அவர்கள்,
எடப்பாடி வட்டம், சேலம் மாவட்டம்.
.......... எதிர்மனுதாரர்

**அறிவிப்பு**

மேற்படி மனுதாரர் தனது தாயார் சின்னத்தாயி என்பவர் கடந்த **05– 10 –1994** அன்று தனது வீட்டில் இறந்தார் என்பதை எதிர் மனுதாரரிடம் பதிவு செய்யவில்லை. எனவே மேண்மை தாங்கிய நீதிமன்றத்தின் முன் மேற்படி மனுவை தாக்கல் செய்துள்ளார். மேற்படி மனு விசாரணைக்காக வாய்தா போடப்பட்டுள்ளது. இம் மனு மீது ஆட்சேபனை உள்ளவர்கள் விளம்பர நாளிலிருந்து 15 நாட்களுக்குள் தனது ஆட்சேபனையை நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ ஆட்சேபனையை தெரிவித்துக் –கொள்ளலாம் இல்லை எனில் மனு மீது ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்படும் என்பதை அறியவும்.

/ நீதிமன்ற உத்தரவு படி /
K. KASILINGAM, B.A., B.L.,
Advocate., SANKARI

---

**உட்கோட்ட நடுவர் நீதிமன்றம் மற்றும் வருவாய் கோட்டாட்சியர், சங்ககிரி.**
**பிஇசிய எண். 641 / 2024 ( D )**

சுமதி, W / O. சதீஸ்குமார்,
க.எண். 1–1–59, காட்டூர்,
பூலாம்பட்டி கிராமம்,
எடப்பாடி வட்டம், சேலம் மாவட்டம்.
............ மனுதாரர்

/ எதிராக /

செயல் அலுவலர் அவர்கள்,
பூலாம்பட்டி பேரூராட்சி, சேலம் மாவட்டம்.
...... எதிர்மனுதாரர்

**அறிவிப்பு**

மேற்படி மனுதாரரின் மகள் ச. சௌமிகா என்பவர் கடந்த 03 – 07 – 2013 அன்று தனது வீட்டில் பிறந்தார் என்பதை எதிர் மனுதாரரிடம் பதிவு செய்யவில்லை. எனவே மேண்மை தாங்கிய நீதிமன்றத்தின் முன் மேற்படி மனுவை தாக்கல் செய்து உள்ளார். மேற்படி மனு விசாரணைக்காக வாய்தா போடப்பட்டுள்ளது. இம் மனு மீது ஆட்சேபனை உள்ளவர்கள் விளம்பர நாளிலிருந்து 15 நாட்களுக்குள் தனது ஆட்சேபனையை நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ ஆட்சேபனையை தெரிவித்துக்கொள்ளலாம் இல்லை எனில் மனு மீது ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்படும் என்பதை அறியவும்.

/ நீதிமன்ற உத்தரவு படி /
D. CHANDRA SEKAR,B.A.B.L.,
ADVOCATE, SANKARI.

---

**உட்கோட்ட நடுவர் நீதிமன்றம் மற்றும் வருவாய் கோட்டாட்சியர், சங்ககிரி.**
**பிஇசிய எண்.607 / 2024 / D**

K. குருநாதன், S/O. லேட். கருப்புசெட்டி (எ) சேவிக்கவுண்டர்,
க.எண். 41, கிருஷ்ணாபுரம், மைலம்பாடி,
ஈரோடு வட்டம், ஈரோடு மாவட்டம்.
...... மனுதாரர்

/ எதிராக /

வட்டாட்சியர் அவர்கள்,
எடப்பாடி வட்டம் , சேலம் மாவட்டம்.
...... எதிர்மனுதாரர்

**அறிவிப்பு**

மேற்படி மனுதாரரின் தந்தை கருப்புசெட்டி (எ) சேவிக்கவுண்டர், என்பவர் கடந்த 05 – 04 – 2011 அன்று சேலம் மாவட்டம், எடப்பாடி வட்டம், ஆடையூர் கிராமம், வாழக்காய்ச்சிக்காடு என்ற இடத்தில் இறந்தார் என்பதை எதிர் மனுதாரரிடம் பதிவு செய்யவில்லை. எனவே மேண்மை தாங்கிய நீதிமன்றத்தின் முன் மேற்படி மனுவை தாக்கல் செய்து உள்ளார். மேற்படிமனு விசாரணைக்காக வாய்தா போடப்பட்டுள்ளது. இம் மனு மீது ஆட்சேபனை உள்ளவர்கள் விளம்பர நாளிலிருந்து 15 நாட்களுக்குள் தனது ஆட்சேபனையை நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ ஆட்சேபனையை தெரிவித்துக்கொள்ளலாம் இல்லை எனில் மனு மீது ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்படும் என்பதை அறியவும்.

/ நீதிமன்ற உத்தரவு படி /
K. ARJUNAN,B.A.,B.L.,
ADVOCATE, SANKARI.

---

**உட்கோட்ட நடுவர் நீதிமன்றம் மற்றும் வருவாய் கோட்டாட்சியர், சங்ககிரி.**
**பிஇசிய எண்.608 / 2024 / D**

K. குருநாதன், S/O. லேட். கருப்புசெட்டி (எ) சேவிக்கவுண்டர்,
க.எண். 41, கிருஷ்ணாபுரம், மைலம்பாடி,
ஈரோடு வட்டம், ஈரோடு மாவட்டம்.
...... மனுதாரர்

/ எதிராக /

வட்டாட்சியர் அவர்கள்,
எடப்பாடி வட்டம் , சேலம் மாவட்டம்.
...... எதிர்மனுதாரர்

**அறிவிப்பு**

மேற்படி மனுதாரரின் தாயார் பழனியம்மாள் என்பவர் கடந்த 03 – 06 – 2001 அன்று சேலம் மாவட்டம், எடப்பாடி வட்டம், ஆடையூர் கிராமம், வாழக்காய்ச்சிக்காடு என்ற இடத்தில் இறந்தார் என்பதை எதிர் மனுதாரரிடம் பதிவு செய்யவில்லை. எனவே மேண்மை தாங்கிய நீதிமன்றத்தின் முன் மேற்படி மனுவை தாக்கல் செய்து உள்ளார். மேற்படிமனு விசாரணைக்காக வாய்தா போடப்பட்டுள்ளது. இம் மனு மீது ஆட்சேபனை உள்ளவர்கள் விளம்பர நாளிலிருந்து 15 நாட்களுக்குள் தனது ஆட்சேபனையை நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ ஆட்சேபனையை தெரிவித்துக்கொள்ளலாம் இல்லை எனில் மனு மீது ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்படும் என்பதை அறியவும்.

/ நீதிமன்ற உத்தரவு படி /
K. ARJUNAN,B.A.,B.L.,
ADVOCATE, SANKARI.

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers
17-A/2, Meyyanur Road, Salem - 636 004.
Ph: 0427- 2334165
E-Mail: salemedi@thinaboomi.com
RNI.Regn No.TNTAM/2001/4003
Editor:S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

